# விவசாயியும் கழுதையும்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# விவசாயியும் கழுதையும்

உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com

# விவசாயியும் கழுதையும்





ஓர் ஊரில் விவசாயி ஒருவர் சந்தைக்குப் பொருள்களைச் சுமந்து செல்வதற்காகக் கழுதை ஒன்றை வளர்த்து வந்தார். ஒரு நாள் தனது மகன் மற்றும் கழுதையுடன் சந்தைக்கு நடந்து சென்றார். செல்லும் வழியில் ஒருவர் விவசாயியைப் பார்த்து,“அதான் கழுதை இருக்கிறதே! பிறகு ஏன் நீங்கள் நடந்து வருகிறீர்கள்?” என்று கேட்டார்.



உடனே விவசாயி கழுதையின் மேல் ஏறி அமர்ந்து கொண்டார். பின்னால் அவரது மகன் நடந்து சென்றான். சிறிது தூரம் சென்றவுடன் பெண் ஒருத்தி "சின்னப் பையன் நடந்து வருகிறான், நீங்கள் மட்டும் கழுதையின் மேல் அமர்ந்து வருகிறீர்கள்” நீங்கள் நன்றாகத் தானே உள்ளீர்கள்? என்று கேட்டாள். உடனே விவசாயி கழுதையின் மேலிருந்து இறங்கி தனது மகனைக் கழுதையின் மேல் அமரச் செய்தார்.



மேலும் சிறிது தூரம் சென்றனர். அங்கு ஒரு பெண்மணி விவசாயியைப் பார்த்து “இருவருமே கழுதையின் மேல் அமர்ந்து வரலாமே? என்று கூறிச் சென்றாள். பெண்ணின் பேச்சைக் கேட்டு இருவருமே கழுதையின் மேல் அமர்ந்து சென்றனர். அவர்கள் செல்லும் வழியில் “பாவம் கழுதை! இவ்வளவு சுமையா! எவ்வளவு களைப்பாக இருக்கும்” என்று வழிப்போக்கர்கள் கூறினர்.



விவசாயிக்கு என்ன செய்வது என்றே தெரியவில்லை!! கழுதையைத் தூக்கிச் செல்லலாம் என்று மகன் கூற, விவசாயி கழுதையைத் தூக்கிச் சென்றார். செல்லும் வழியில் கழுதை மிரண்டு ஆற்று நீரில் விழுந்தது. இறுதியில் கழுதை இருவருக்கும் பயன்படவில்லை.



நாம் மற்றவர்கள் பேச்சைக் கேட்டு நமது நேரத்தை வீணாக்கிவிட்டோம். “கழுதையின் மேல் இருவரும் சிறிது சிறிது தூரம் அமர்ந்து சென்றிருந்தாலே சந்தைக்குச் சென்று இருக்கலாம்” என்று எண்ணி வருத்தப்பட்டனர்.



## கதையின் நீதி

நாம் எப்போதும் சுயமாகச் சிந்தித்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

நாம் எப்பொழுதும் சுயமாகச் சிந்தித்து முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com